# SHRI KRISHNA ACADEMY

**NEET,JEE & BOARD EXAM(10th,+1,+2) COACHING CENTRE**

**SBM SCHOOL CAMPUS, TRICHY MAIN ROAD,NAMAKKAL**

**CELL: 99655 31727 , 94432 31727**

---

வகுப்பு : X மாதிரி காலாண்டுத் தேர்வு மதிப்பெண்கள் : 100

பாடம் : தமிழ் இரண்டாம் தாள் காலம் : 2.30

(இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி, கட்டுரை, கடிதம்)

---

## பகுதி – I

### (மதிப்பெண்கள் : 14)

**பலவுள் தெரிக** **14x1=14**

1. செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது
   அ) சொல்லிசை அளபெடை ஆ) இசைநிறை அளபெடை இ) இன்னிசை அளபெடை
2. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் எழுத்துகளின் எண்ணிக்கை
   அ) பத்து ஆ) பன்னிரண்டு இ) பதினொன்று
3. ‘பெரிய மீசை’ சிரித்தார்- வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
4. மார்கழித் திங்கள் என்பது -------------
   அ) பண்புத்தொகை ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை இ) சிறப்புப்பெயர் ஈ) பொதுப்பெயர்
5. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது
   அ) எழுவாய்த்தொடர் ஆ) விளித்தொடர்
   இ) வினையெச்சத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்
6. நண்பா எழுது! - எவ்வகைத் தொடர்
   அ) எழுவாய்த்தொடர் ஆ) வினாத்தொடர் இ) விளித்தொடர் ஈ) உரிச்சொல்தொடர்
7. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ---------------- எனப்படும்
   அ) வழு ஆ) வழாநிலை இ) சரியானது ஈ) வழுவமைதி
8. மாறன் என்பான் தன்னைப் பற்றிப் பிறரிடம் கூறும்போது, “இந்த மாறன் ஒரு நாளும் பொய் கூறமாட்டான் என்று கூறுவது -------------
   அ) பால் வழுவமைதி ஆ) திணை வழுவமைதி இ) இட வழுவமைதி ஈ) மரபு வழுவமைதி
9. குறிப்பு விடைகளில் பொருந்தாததைக் கண்டறிக
   அ) நேர்விடை ஆ) ஏவல்விடை இ) கூறுவது கூறல் ஈ) இனமொழி
10. “வீட்டில் தக்காளி இல்லை, நீ கடைக்குச் செல்கிறாயா?” என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்வது -------------------
    அ) ஐயவினா ஆ) அறியா வினா இ) கொளல் வினா ஈ) ஏவல் வினா
11. பொருள்கோள் ------------ வகைப்படும்
    அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9
12. உடன்பட்டுக் கூறும் விடை
    அ) சுட்டுவிடை ஆ) மறைவிடை இ) நேர் விடை ஈ) ஏவல் விடை
13. இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை உள்ள சிறுபொழுது
    அ) எற்பாடு ஆ) மாலை இ) யாமம் ஈ) வைகறை
14. நண்பகல் எத்திணைக்குரிய சிறுபொழுது?
    அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை

SHRI KRISHNA ACADEMY

## பகுதி – II
## (மதிப்பெண்கள் : 20)
## பிரிவு - 1

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க** **5x2=10**

15. **நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகள் தருக.**
    அ) நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்
    ஆ) குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்.
16. ஆலும் வேலும் பல்லுக்குறுதி
    நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் எழுதுக.
17. **பழமொழிகளை நிறைவு செய்க.**
    அ) உப்பில்லா --------------------- ஆ) ஒரு பானை ----------------------
18. **கீழ்க்காணும் சொற்களுக்குக் கலைச்சொல்லாக்கம் தருக.**
    அ) EPIC Literature - ஆ) Thesis -
19. **சொற்களை இணைத்துப் பொருத்தமான தொடரை உருவாக்குக.**
    தேன், பொன், மழை, விலங்கு
20. **தொடரைப் படித்து விடை எழுதுக.**
    அ) நூலின் பயன் படித்தல் எனில் கல்வியின் பயன் ------------
    ஆ) மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது ------------
21. **தனிச்சொற்றொடராக மாற்றுக.**
    அ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.
    ஆ) ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுப் போலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** **5x2=10**
**(28வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க)**

22. இன்னிசை அளபெடை என்றால் என்ன? சான்று தருக.
23. வினைத்தொகை என்றால் என்ன? சான்று தருக.
24. கூட்டுநிலைப் பெயரெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
25. வழுவமைதி என்றால் என்ன?
26. குறிப்பு விடைகள் எத்தனை வகை? அவை யாவை?
27. அன்பின் ஐந்திணைகள் எத்தனை? அவை யாவை?
28. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – III (மதிப்பெண்கள் : 50)
## பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க** **2x5=10**

29. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
    கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.
30. **அலகிட்டு வாய்பாடு எழுதுக.**
    உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
    கல்லார் அறிவிலா தார்.

SRI KRISHNA ACADEMY
www.Padasalai.Org

31. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

## பிரிவு - 2

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க** **4x5=20**

**(37வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க)**

32. அட்டவணையில் விடுபட்டவற்றைத் தனியே எடுத்தெழுதுக.

| வேர்ச்சொல் | எழுவாய்த்தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித்தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| தா | | தந்த அரசர் | | அரசே தருக! | |
| சொல் | அம்மா சொன்னார் | | சொல்லிச் சென்றார் | | கதையைச் சொன்னார் |

33. பின்வரும் தொடரில் விடுபட்ட வண்ணக் குறிப்புகளை உங்களின் எண்ணங்களால் பொருத்தமுற நிரப்புக.
கண்ணக்குக் குளுமையாக இருக்கும் -------- புல்வெளிகளில், கதிரவனின் ---------- வெயில் பரவிக் கிடக்கிற வேளையில், சட்டென வானம் ---------- தொடங்கியது. மழைவரும் போலிக்கிறது. சடசடவெனக் கொட்டித்தீர்த்த மழைக்குப் பிறகு வானம் --------- தொடங்கியது. அதனைத் தொடர்ந்து கீழ்வானம் ----------
(குறிப்புகள்: மஞ்சள், பசுமை, சிவத்தல், கருத்தல், வெளுத்தல்)

34. அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னொரு புறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள் ...... இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள். இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்துக

35. படத்தைப் பார்த்துக் கவிதையைத் தொடர்க



36. ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

37. பாடலின் இலக்கிய நயத்தை உணர்ந்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெளிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?

- பாரதியார்

அ) பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
ஆ) பாடலில் இடம்பெற்றுள்ள கற்பனை நயம் ஒன்றினை எழுதுக.
இ) மோனைச் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்தெழுதுக.

ஈ) பாடலில் பாரதியார் உணர்த்தும் மையக்கருத்து யாது?
உ) பாடலின் இயைபு நயத்தினைக் குறிப்பிடுக.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **2x5=10**

38. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் **கோபல்லபுரத்து மக்கள்** கதைப்பகுதி கொண்டு விவரிக்க.
39. நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.
40. பாய்ச்சல் சிறுகதையைச் சுருக்கி எழுதுக.

## பிரிவு - 4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **2x5=10**

41. **விண்ணப்பப்படிவத்தை நிரப்புக.**
தமிழன் என்பவர் கன்னியாகுமாரி மாவட்ட நூலகத்தில் உறுப்பினராவதற்குரிய படிவத்தை நிரப்புக.

42. **கீழ்க்கண்ட பத்தியை மொழிபெயர்க்க:**
The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade ways the dark. The milky clounds start their wandering. The colourful birds start twitting their morning melodies in peresussion. The cute butterflies dance around the flowers. The flowers' frangrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**(அல்லது)**

**Koothu**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy contumes and bright makeup. Koothu is very popular among rural areas.

## பகுதி - IV

**மதிப்பெண்கள் : 16**

**விரிவாக விடையளிக்க** **2x8=16**

43. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

44. அ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/ கட்டுரை/ சிறுகதை/ கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக. குறிப்பு : நூலின் தலைப்பு – நூலின் மையப் பொருள் - மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் - நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.

SHRI KRISHNA ACADEMY

(அல்லது)

45. ஆ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி சதகம் சமைத்து பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி, அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப்புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு கட்டுரை எழுதுக.


# SHRI KRISHNA ACADEMY

- **QUESTION BANK AND MINIMUM MATERIALS for ALL SUBJECTS AVAILABLE FOR X,XI,XII.**
- **CREATIVE QUESTIONS , STUDY MATERIALS(TOPPER GUIDE), FULL TEST QUESTION PAPERS ,ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE in ALL SUBJECTS.**

→ **For MORE DETAILS - 99655 31727 , 99768 73243**

SHRI KRISHNA ACADEMY